நல்லூர் இளை நூலகம் ...ன்றம் யாழ்ப்பாணம்

Registered as a Newspaper | பக்கங்கள் 08 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 06 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மாசி 4 | (16.02.94) | புதன்கிழமை | ஓசை 363

## மாணவரமைப்பின் அறிவியற்கழகம் இன்று செயற்பாட்டை ஆரம்பிக்கும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினால் உருவாக்கப்பட்ட அறிவியற் கழகத்தின் திறப்பு விழா இன்று மாலை 3.00 மணியளவில் இணுவிலில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட மாணவரமைப்பு பொறுப்பாளர் திரு. ஆ. இதயன் தலைமையில் நடைபெறவுள்ள இத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்தசாமி, தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி திரு. சி. மகேஸ்வரன், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. க.ஜெயரட்ணம், யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. வ. செல்வராசா, தமிழீழ துணை அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய விரைவுத் தாக்குதல் படகு கரையோரத்தில் போரிட ஏற்றது

(கொழும்பு)

பிரெஞ்ச் உதவித் திட்டத்தின் கீழ் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு கடந்த வாரம் கடற்படையிடம் கையளிக்கப்பட்ட விரைவு தாக்குதல் படகு ஆழம் குறைந்த கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க பெரிதும் உதவும் என சண்டே ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பிரெஞ்ச் உதவியுடன் அமைக்கப்படும் கடற்படைக்கான நான்கு விரைவு தாக்குதல் படகுகளில் முதலாவது படகு கடந்த வாரம் சிறிலங்கா கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது பூநகரி தாக்குதலின் போது புலிகளின் முற்றுகைக்குள் அகப்பட்ட படையினரை மீட்கமேலதிகப் படைகள் விரைவு தாக்குதல் படகுகள் மூலமாகவும், பீரங்கிப் படகுகள் மூலமாகவும் அனுப்பிவைக்கப்பட்டனர். ஆனால் கரையிலிருந்து புலிகள் காட்டிய எதிர்ப்பு படையினரை தரையிறங்க விடாது தடுத்ததுடன் கடற்படை படகுகளையும் ஈடுகொடுக்க முடியாது பின்வாங்கச் செய்ய வேண்டி ஏற்பட்டது. இதன் மூலம் ஆழம் குறைந்த கடற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நிலையற்ற கொள்கையே படையின் பெரும் இழப்பிற்கு காரணம்!

(கொழும்பு)

ஈழப்போரின் தன்மை குறித்து தெளிவான கொள்கை அரசுக்கு இல்லாமல் இருப்பதனாலேயே சிறிலங்கா ஆயுதப்படைகள் ஈழப்போரில் பெரும் இழப்புகளை சந்திப்பதற்கு காரணம். இந்த இடர் தொடரவே செய்யும் என சண்டே ஐலண்ட் பத்திரிகையில் ராவணா என்பவர் எழுதிய செய்தி கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுதியான அரசியல் கொள்கை, அர்ப்பணிப்புள்ள இராணுவத் தலைமை என்னும் இரு காரணிகளே அரசுக்கு இன்றைய தேவை. கடந்த கால அரசுகளிடம் இவை இருக்கவில்லை. சில அரசியல் வாதிகள் நிபந்தனையற்ற பேச்சுக்காக விடுதலைப் புலிகளை அழைக்கின்றனர். அதே சமயம் வேறு சிலர் ஆயுதங்களை கீழே போடும் வரை புலிகளுடன் பேசமுடியாது என்கின்றனர். இராணுவ நடவடிக்கை மூலமாகவின்றி புலிகள் ஆயுதங்களை கீழே போடமாட்டார்கள் என கடந்த கால அனுபவங்கள் காட்டுகின்றன. இதைவிட வடக்கு கிழக்கு போர் என்பது மூன்று மாதங்களிலே ஆறு மாதங்களிலோ (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்களை கைவிடா வரை புலிகளுடன் பேச்சு இல்லை!

## சிற்றூழியர் இன்மையால் ஸ்ரெச்சர் தள்ளிய மருத்துவர்

(யாழ்ப்பாணம்)

போதிய அளவு சிற்றூழியர்கள் இன்மையால் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு கொண்டு செல்ல வேண்டிய நோயாளர் ஒருவரை ஸ்ரெச்சரில் வைத்து மருத்துவரே தள்ளிச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று யாழ். போதனா மருத்துவ மனையில் நிகழ்ந்தது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; 8 ஆம் இலக்க விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவரை உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவிற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டபோது அங்கிருந்து நோயாளியை ஸ்ரெச்சரில் வைத்து தள்ளிச் செல்வதற்கு சிற்றூழியர் இல்லாமையினால் மருத்துவர் ஒருவர் அந் நோயாளியை ஸ்ரெச்சரில் வைத்து தானே அவசர சிகிச்சைப் பிரிவிற்கு தள்ளிச் சென்றார். (சி).(ச)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுக்கு நிபந்தனை

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிட்ட நிலையில் அதன் தலைவர் வே. பிரபாகரனுடன் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும் என சிறிலங்காவின் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். கொத்மலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே இவ் நிபந்தனையை அவர் தெரிவித்தார்.

## கடற்படை பீரங்கித்தாக்கு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ரோந்துசென்ற சிறிலங்கா கடற்படையினர் தொண்டமானாறு மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று காலை 4. 30 மணியளவில் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். (யோ)

## இன்று தபால்களை சேர்க்கவும்

## சமாதான முயற்சியில் நாம் குறித்த எல்லைவரையே செல்லலாம்

### ஆங்கில திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ

(யாழ்ப்பாணம்)

"சமாதான முயற்சியின் அடுத்த கட்டம் பௌத்த பிக்குகளின் கைகளில்தான் உள்ளது. அரசியலில் ...ணிசமான செல்வாக்கைக்கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளிதான முயற்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. அந்த நடவடிக்கையில் என்னைப் பொறுத்தவரையில் வெற்றி கிட்டியுள்ளது. சமாதான முயற்சியின் அடுத்த கட்டத்துக்கு நாம் தென்பகுதியில் உள்ள பௌத்த சிங்கள மக்களும், பௌத்த பிக்குகளும் ஒரு பொழுதும் விரும்பமாட்டார்கள். இதனால் சமாதான முயற்சிக்கான பாதையில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் நாம்

# புலிகளுடன் பேச்சு இல்லை!

இலக்க விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவரை உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவிற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டபோது அங்கிருந்து நோயாளியை ஸ்ரெச்சரில் வைத்து தள்ளிச் செல்வதற்கு சிற்றூழியர் இல்லாமையினால் மருத்துவர் ஒருவர் அந் நோயாளியை ஸ்ரெச்சரில் வைத்து தானே அவசர சிகிச்சைப் பிரிவிற்கு தள்ளிச் சென்றார். (சி).(ச)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுக்கு நிபந்தனை

[கொழும்பு]

**விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிட்ட நிலையில் அதன் தலைவர் வே. பிரபாகரனுடன் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும் என சிறிலங்கா வின் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். கொத்மலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே இவ் நிபந்தனையை அவர் தெரிவித்தார்.**

மேலும் ரணில் விக்கிரமசிங்கா பேசுகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும், ஆரம்பம் முதல் இறுதி வரையிலான பேச்சுகளில் தலைவர் வே. பிரபாகரன் கலந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆயுதங்களை கைவிடாத பேச்சு வார்த்தை இராணுவத்தினருக்குப் பாதகமான

(4ஆம் பக்கம் பார்க்க)

## நிபந்தனையற்ற பேச்சிற்கு ராணுவ உயர் பீடம் தயார்

### ஐலண்ட் பத்திரிகை தகவல்

இராணுவ உயர் பீடம் கூட விடுதலைப்புலிகளை நிபந்தனையின்றி பேச்சுவார்த்தைக்கு வர முடியும் எனக் கூறும்போது இதை அரசு நிராகரித்து வருவதாக சண்டே ஐலண்ட் பத்திரிகை தெரிவிக்கின்றது.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழ போடும்வரையில் அரசு அவர்களுடன் பேசத் தயாராக இல்லை எனக்கூறுகின்றது. தெற்கில் தேர்தல் நடைபெறவுள்ள இவ் வேளையில் அரசு விடுதலைப்புலிகளுடன் பேச விரும்பவில்லை எனவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது.

## கடற்படை பீரங்கித்தாக்கு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ரோந்துசென்ற சிறிலங்கா கடற்படையினர் தொண்டமானாறு மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று காலை 4. 30 மணியளவில் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். (யோ)

## இன்று தபால்களை சேர்க்கவும்

இன்று பருத்தித்துறையிலிருந்து கொழும்பு செல்லும் கப்பலில் யாழ் குடாநாட்டுத் தபாற் பைகள் அனுப்பி வைக்கப்பட இருப்பதால் பொதுமக்கள் தங்கள் கடிதங்களை இன்று காலை 8 மணிக்கு முன்னர் யாழ் பிரதம அஞ்சலக தபாற் பெட்டியில் சேர்க்குமாறு யாழ் அஞ்சலக நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.

## உலங்குவானூர்தி நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று காலை 8. 25 மணியளவில் பண்டத்தரிப்பு, சுழிபுரம், சங்கானை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் நாம் குறித்த எல்லைவரையே செல்லலாம்

### ஆங்கில திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ

(யாழ்ப்பாணம்)

"சமாதான முயற்சியின் அடுத்த கட்டம் பௌத்த பிக்குகளின் கைகளில்தான் உள்ளது. அரசியலில் கணிசமான செல்வாக்கைக்கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளினாலேயே சமாதான முயற்சியை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியும்" இவ்வாறு ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கான நல்லெண்ண விஜயத்தை முடித்துக்கொண்டுகொழும்புநோக்கிப் புறப்படுவதற்குச் சற்று முன்னர் எமது செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். எனது சக்திக்குட்பட்டவரையும் நான் சமாதான முயற்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். அந்த நடவடிக்கையில் என்னைப்பொறுத்தவரையில் வெற்றி கிட்டியுள்ளது. சமாதான முயற்சியின் அடுத்த கட்டத்துக்கு நாம் சென்று அரசியலில் எமக்கு செல்வாக்கு அதிகரிப்பதை தென்பகுதியில்உள்ளபௌத்த சிங்கள மக்களும், பௌத்த பிக்குகளும் ஒரு பொழுதும் விரும்பமாட்டார்கள். இதனால் சமாதான முயற்சிக்கான பாதையில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் நாம் செல்லமுடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வலிவடக்குப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் நேற்றுக் காலை வலிவடக்குப் பகுதியில் அகோர குண்டுவீச்சுத்தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் பலாலி விமானப் படைத் தளத்திலிருந்து கிளம்பிய இரு சியாமா செட்டி ரக குண்டுவீச்சு விமானங்கள் புன்னாலைக் கட்டுவன் வடக்கு மற்றும் ஈவினைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவில் விமான குண்டு வீச்சு மூன்று பொதுமக்கள் உடல்சிதறிப்பலி

### எட்டுப் பேர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள நாச்சிக்குடாப் பகுதியில் பொதுமக்களின்குடியிருப்புப் பகுதிகள்மீது சிறிலங்கா விமானப்படையினரது புக்காரா விமானங்கள் நடாத்திய குண்டுத் தாக்குதலில் மூன்றுபேர் கொல்லப்பட்டதுடன் எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை பத்து மணியளவில் மேற்படி பகுதிக்கு விரைந்துவந்த இரு புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது பலத்த குண்டுத்தாக்குதலை நடாத்தின. பத்துக்கும் மேற்பட்ட குண்டுகள் இத்தாக்குதலின் போது வீசப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் மாதகலில் இருந்துஇடம்பெயர்ந்து அங்கு வசித்துவந்த சின்னராசா (வயது 60), சரஸ்வதி (வயது 50), மனோஜினா (வயது 17) ஆகிய மூவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் ஜே. ஜெராட் (வயது 9), எஸ். அனுஸ்டியா (வயது 16), எஸ். தர்சினி (வயது 5), எம். ஜெனிற்றா (வயது 5), எஸ். எம். அந்தோனிப்பிள்ளை (வயது 39) எஸ். டொறின் (வயது 16), அ. மொனிக்கம்மா (வயது

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஜேர்மன் முறை அரசியலமைப்பு உருவாக்க விஜேதுங்கா திட்டம்

(கொழும்பு)

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் வடக்கிலும் தேர்தல்களை நடத்த தாம் யோசித்திருப்பதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார். 1994ஆம் ஆண்டு ஒக்ரோபர் இறுதியில் அல்லது நவம்பர்முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் எனவும் அவர் கூறினார். கட்டுகஸ்தோட்டவில் நடைபெற்ற ஐ. தே. க. மாநாடு ஒன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றம் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்யவும் ஜேர்மன் அரசியலமைப்புபோன்ற அரசியலமைப்பை ஏற்படுத்தவும் அரசியலமைப்பு சட்டத்தை மாற்றும்படி ஐ. தே. க. பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சிபார்சு செய்துள்ளது. அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம்செய்ய பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் வேண்டும். சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாவிடினும் எதிர்க்கட்சியின் ஒரு பிரிவினரின் ஆதரவுடன் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என அநுரா பண்டாரநாயக்கா கூறியதாகவும் ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்தார்.

## புதிய விமானப்படை தளபதி நாளை பதவி ஏற்கிறார்

சிறிலங்கா விமானப்படையின் புதிய தளபதியாக எயர் வைஸ் மார்சல் ஒலிவர் எம். ரணசிங்க நாளை பதவி ஏற்கிறார். இவர் சிறிலங்கா விமானப்படையில் கடந்த 26 ஆண்டுகளாக பணியாற்றியுள்ளார்.

## உலங்குவானூர்திகள் கொள்வனவு அதிகாரிகள் ரஷ்யா விரைவு

(கொழும்பு)

இலங்கை விமானப்படையை நவீனமயப்படுத்தும் பாதுகாப்பு அமைச்சின் திட்டத்தின் ஓர் அங்கமாக ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ள எம். ஐ. 8 ரக உலங்குவானூர்திகளை வாங்குவதற்காக விமானப்படையைச்சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு ஒன்று கடந்தவாரம் ரஷ்யாவிற்கு சென்றுள்ளது.

தற்போது புதிதாக வாங்கவுள்ள எம். ஐ. 8ரக விமானங்கள் உலகில் 21 நாடுகளில் உபயோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா தயாரித்துள்ள நவீன கோப்றா விமானத்திற்கு அடுத்தபடியாக இந்த எம். ஐ. 8 ரக உலங்கு வானூர்திகள் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றனவாம். இலங்கை விமானப்படையினரிடம் இத்தகைய உலங்குவானூர்திகள் இரண்டு உள்ளன. இவை கடந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

### காஷ்மீர் விவகாரம்

## சிறிலங்கா ஆதரவை பாகிஸ்தான் கோருகிறது!

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் சிறிலங்காவின் உதவியை நாடியுள்ளது. ஐ நாசபை காஷ்மீர் குறித்து தீர்மானம் நிறைவேற்ற முன்பாக சிறிலங்காவின் ஆதரவை கேட்க பாகிஸ்தான் சிறப்பு பிரதிநிதி ஒருவர் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்

### முக்கிய அறிவித்தல்

மக்கள் தடுமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு மக்கள், அபிமானம் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீ சாந்தா அச்சக வேலினேயே இயங்குகின்றது. (7502)

### வெளிவந்துவிட்டது

சமூகக்கல்வி துரித மீட்டலுக்கான வினா விடை ஆண்டு 9 ஆக்கம்:- க. சந்திரசேகரம் ஏகவிநியோகஸ்தர்கள்:-(1)சோதி புத்தகசாலை கச்சாய் வீதி, சாவகச்சேரி, (2)ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, 235,காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம். (7528)

### தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருட்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்வளம் இல,81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8638)

### விற்பனைக்கு

அடைவைப்பதற்குரிய பல இன முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். கந்தசாமி அன்சன்ஸ்,இல15, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (7539)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மெய்யியற்கழகத்தின் ஆதரவில் ஆன்ம தரிசனம் அல்லது சாங்கிய சித்தாந்தம் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பிறப்பு எழுதும் பத்திரங்கள் முடிந்தன

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட செயலக மேலதிக பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர் திணைக்களத்தில் 1954ஆம் ஆண்டு ஆவணி மாதத்திற்குப் பின்னர் பிறந்தவர்களுக்குரிய பிறப்புச்சான்றுப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்

---

## கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள் 10 ஆவது ஆண்டு நிறைவு

"இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்."

(1. சாமு 7:12)

இறைபணியில் கல்வாரி ஆலயச் சபையின் பத்தாண்டு நிறைவில் மகிழ்வோம். கர்த்தரைப் புகழுவோம்.

ஆராதனையிற் கலந்து அருள் பெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

18-02-94 முற்பகல் - 9.00 - 12.00 மணிவரை

(வந்தனை வழிபாடு)

19.02.94 பிற்பகல் - 3.30 மணி முதல்

(விசேட ஆராதனைகள்)

(பாடல்கள், நாடகம், சாட்சிகள், தேவ செய்திகள் இன்னும் பல)

தேவ செய்தி: போதகர் சிதம்பரப்பிள்ளை அவர்கள்.

நன்றி:

கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள்,

சபை மேய்ப்பன், விசுவாசிகள்

இல. 89, பிறவுண் வீதி, கொக்குவில். (7535)

---

## அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## பதவி வெற்றிடம்

இவ்வைத்தியசாலையின் உயிரியல் மருத்துவ பொறியியல் (Bio-Medical Engineering) பிரிவுக்கு முகாரி (Foreman) பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் 28.02.94 திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தகைமைகள்:**

இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த (சா.த) தேர்வில், சிங்களம்/தமிழ்மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட இன்னொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், எந்திரவியல் (Mechanical) மின்னியல் (Electrical) அல்லது இலத்திரனியல் (Electronics) பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்படிப்ளோமா நெறியை பூர்த்தி செய்தவராய் இருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் எந்திரவியல் மின்னியல் அல்லது இலத்திரனியல் பொறியியல் கற்கைநெறி ஒன்றை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

வயது:- 28-02-94இல்

18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசசேவையில் உள்ளவர்களுக்கு வய

---

## வெங்காய விதைகள் விநியோகம்

யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி பசுமை நிலையத்தின் ஊடாக சிறந்த இன பம்பாய் வெங்காய விதைகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சுருக்கெழுத்தாளர் தரம் 11 (ஆங்கிலம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1994-03-11 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்; ரூபா 2890 - 10x55 - 7x65 - 3895/- (இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப் படியாக 1994 டிசெம்பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.)

தகைமைகள்:

1. ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன், இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ.த (சாதாரண தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.
2. பின்வரும் ஆகக் குறைந்த வேகங்களுடன் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் தேர்ச்சி.

சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 80 சொற்கள்.
தட்டச்சடித்தல் நிமிடத்திற்கு 35 சொற்கள்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு:

அ) தெரிவு சோதனை மூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும்.
ஆ) தமிழ் சுருக்கெழுத்தில் மேலதிக அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/-பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடிதஉறையையும்அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994 . 02 . 11
(சி-8639)

---

இலங்கை

இளங்கலைஞர் மன்றத்தின்

# 14-வது இசைவிழா

## 5-ம் நாள் 16-2-94 புதன்கிழமை

"வெங்கடேஸ்வரா" கந்தசாமி அன் சன்ஸ், உடுப்பிட்டி, கந்தசாமி கிருபாகரன் உடுப்பிட்டி ஆதரவில்

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**

கே. சந்திரன், என். கோவிந்தசாமி | நாதஸ்வரம்
ஆர். ஷண்முகசுந்தரம், ஆர். உலகநாதன் | தவில்

**5.00 - 5.10 மிருதங்க இசை**

ஈ. ரகுலன், கே. மயூரன்

**5.10 - 5.30 வீணை இசை**

செல்வி மு. சத்தியபாமாவின் மாணவர்கள்

**5.30 - 5.50 பாட்டு**

பி. ஷயந்தா, கே. கௌரி, எஸ். காஞ்சனா, ஜீ. கீர்வாணி | பாட்டு
எஸ். சர்வேஸ்வர சர்மா - வயலின்
எஸ். நாகராஜன் - மிருதங்கம்

**5.50 - 6.15 வீணை இசை**

சத்தியபாமா முத்துக்குமாரு - வீணை
கண்ணதாஸன் - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**

வர்ணராமேஸ்வரன் - பாட்டு
வீ. கே. குமாரசாமி - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**

உரிமையாளர், வெங்கடேஸ்வரா
கந்தசாமி கிருபாகரன்
எஸ். வீ. சிவகுருநாதன் - (வீ. எம். எஸ். நிறுவனம்)
டாக்டர். வீ. ஏகாம்பரம்

தலைவர்:- சங்கீதபூஷணம் எஸ். பாலசிங்கம் (தலைவர் அ. இ. த மன்றம்)

பிரதம விருந்தினர்:- சுந்தரம் டிவகலாலா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்/கிளிநொச்சி)

சிறப்பு விருந்தினர்:- நா. க. சண்முகநாதபிள்ளை (அதிபர் யாழ்/ மத்தியகல்லூரி)

**7.30 - 8.30 இசைக்கச்சேரி**

என். வீ. எம். நவரத்தினம் - பாட்டு
வீ. கே. குமாரசாமி - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**

கொழும்புத்துறை "கலையகம்" மாணவிகள்
தயாரிப்பு: லலிதாஞ்சனா கனகேந்திரன்

**வாழ்த்துவோர்:**

னம் அல்லது சாங்கிய சித் தாந்தம் என்னும் தலைப் பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் புவியியற்துறை விரிவுரை மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

## பிறப்பு எழுதும் பத்திரங்கள் முடிந்தன

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட செயலக மேலதிக பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர் திணைக் களத்தில் 1954ஆம் ஆண்டு ஆவணி மாதத்திற்குப் பின் னர் பிறந்தவர்களுக்குரிய பிறப்புச்சான்றுப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப் பப்பத்திரங்கள் ஏற்றுக்கொ ள்வதை தற்காலிகமாக நிறு த்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு. அ. பொன் னம்பலம் தெரிவித்துள்ளார்.

பிறப்புச்சான்று எழுதிக் கொடுக்கும் பத்திரம் முடிவ டைந்தமையே இதற்கு முக் கிய காரணம் என்றும், மிக முக்கியமான அத்தியாவசிய தேவைக்கு மட்டும் ஒரு பிரதி வழங்கப்படும் என்றும் அவர் எமது ஈழநாதம் நிருபருக்கு கூறியுள்ளார். (24)

அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட இன்னொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத் தல் வேண்டும்.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், எந்திரவியல் (Mechanical) மின்னியல் (Electrical) அல்லது இலத்திரனியல் (Electronics) பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்படிப்ளோமா நெறியை பூர்த்தி செய்தவராய் இருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன் றில் எந்திரவியல் மின்னியல் அல்லது இலத்திரனியல் பொறியியல் கற்கைநெறி ஒன்றை பூர்த்தி செய்தவ ராக இருத்தல் வேண்டும்.

வயது:- 28-02-94இல்
18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்க னவே அரசசேவையில் உள்ளவர்களுக்கு வய தெல்லை கிடையாது.

வேதனம்:- பொது நிர்வாகசுற்றறிக்கை 387இன்படி
ரூபா 19,440-7x480-10x600 - 28,800
பொது நிர்வாக சுற்றறிக்கை 37/92இன்படி
ரூபா 27,180 - 7x660 - 10x780 - 39,540,

விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப் பட்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் திற்கு தெரிவுக்காக அனுப்பி வைக்கப்படும்.

பணிப்பாளர்.

(சி-8633)

தில் தேர்ச்சி.
சுருக்கெழுத்து நிமிடத் திற்கு 80 சொற்கள்;
தட்டச்சடித்தல் நிமிடத் திற்கு 35 சொற்கள்.
வயது: 40 ஆண்டுகளு க்கு மேற்படலா காது.

குறிப்பு:

அ) தெரிவு சோதனை மூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும்.
ஆ) தமிழ் சுருக்கெழுத் தில் மேலதிக அறிவு டையவர்களுக்கு

வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடை க்கும் விண்ணப்பங்க ளும் விவரங்கள் தெளி வின்றிக் குறிப்பிடப்பட் டுள்ள விண்ணப்பங்க ளும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994.02.11
(சி-8639)

கந்தசாமி கிருபாகரன்
எஸ். வீ. சிவகுருநாதன் - (வீ. எம். எஸ். நிறுவனம்)
டாக்டர். வீ. ஏகாம்பரம்

தலைவர்:- சங்கீதபூஷணம் எஸ். பாலசிங்கம்
(தலைவர் அ. இ. த மன்றம்)

பிரதம விருந்தினர்:- சுந்தரம் டிவகலாலா
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்/கிளிநொச்சி)

சிறப்பு விருந்தினர்:- நா. க. சண்முகநாதபிள்ளை
(அதிபர் யாழ்/ மத்தியகல்லூரி)

**7.30 - 8.30 இசைக்கச்சேரி**

என். வீ. எம். நவரத்தினம் - பாட்டு
வீ. கே. குமாரசாமி - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**

கொழும்புத்துறை ''கலையகம்'' மாணவிகள்
தயாரிப்பு: லலிதாஞ்சனா ஜனகேந்திரன்


வாழ்த்துவோர்:

**மணியம் ஸ்ரோர்ஸ்**

பலாலிறோட், திருநெல்வேலி.

(கி-8626)


உறுதியான கணனிக் கல்விக்கு
வெலிங்டன் சந்திக்கருகில்



# UNIKCO

## COMPUTER CENTRE

- WORD PROCESSING (Word Star Rel 5. 5) and MS - DOS
- dBASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS-DOS
- BASIC LANGUAGE (Including Graphics, Sounds and Files)
- DATA ENTRY OPERATOR TRAINING

COMPUTER துறை சம்பந்தப்பட்ட சகல இலவச ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதன் மூலம் உங்கள் நேரம் வீணாவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

18-2-94 (வார நாட்கள்)
19-2-94 (வார இறுதி நாட்கள்)

அலுவலக நேரம்:
காலை 9-00—12-00மணி வரை
மாலை 2-00—5-00 மணி வரை

மேலதிக விபரங்கட்கு:

**UNIKCO COMPUTER CENTRE**
37, CLOCK TOWER ROAD,
JAFFNA

(சி-8640)


## 45-ம்நாள் நினைவலைகள்



பூநகரியில் நிலக்கண்ணி வெடியில் அகப்பட்டு
வீரச்சாவடைந்த

**கப்டன் துரை/ஸ்ரீகாந்—வேவுப்பிரிவு**

(தேவராசா பாஸ்கர்)
தோப்புக்காடு காரைநகர்

அன்னை மடியில்: 04-06-71
தமிழீழ மண்ணில்: 03-01-94

என்னென்றுரைப்போம்—எம் செல்வா
எல்லாம் கனவோ! கனவேதான்
மின்னல் போலும் இவ் வாழ்வில்
மின்னி மறைந்தாய் கணப்பொழுதில்
மண்ணை மீட்கும் பணியினிலே
மாவீரனாகத் திகழ்ந்து நின்று
எண்ணிச் செய்த திறமைகளை
ஏட்டில் அடங்கா எழுதுதற்கு
வீரமகனாய்ப் பிறந்திட்டு
வீரசுவர்க்கம் அடைந்தவனே!
ஈரமுள்ள நெஞ்சங்கள்
என்றும் உன்னை மறக்காதே!

இம் மாவீரனின் அந்தியேட்டிக் கிரியைகள்(16-2-94 இல்) இன்று நாவலர்வீதி இல. 728 இல்லத்தில் நடை பெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் சக போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 728, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

—குடும்பத்தினர்

(கி-8628)

## நினைவு கூருகின்றோம்.

## 1994-02-16

1985-ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,
✻ இ. சாந்தகுமார் (பட்டிருப்பு-மட்டு)

1986-ம் ஆண்டு மட்டு - ஆயித்தியமலைப் பகுதி யிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்,

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,
சுனில் (மட்டக்களப்பு)

திருமலை - மூதூர், சம்பூர்ப் பகுதியில் மாட்டு வண்டியில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற் கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

✻ விக்ரம் (சிற்றம்பலம் பெனடிக்ற்-இருதயபுரம், மூதூர்-திருமலை)

✻ தர்மலிங்கம் இராசா (இருதயபுரம், மூதூர்-திருமலை)

✻ மோகன் (கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

1988-ம் ஆண்டு கொழும்பு-பம்பலப்பிட்டி, மாணிக்கவிநாயகர் கோயிலில், சிவராத்திரிவிழாவுக்கு கூடி யிருந்த அடியவர்கள் மத்தியில் குண்டுவெடித்தலில் கொல்லப்பட்ட 07 தமிழர்கள்,

1989-ம் ஆண்டு மட்டு - மொறக்கொட்டாஞ் சேனைப் பகுதியில், தேசவிரோதக்குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1992-ம் ஆண்டு திருமலை - சம்பூர், சீதனவெளிப் பகுதிகளைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத் தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 06 தமிழர்கள.

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

✻ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமை ப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8635)

நல்லூர் கிளை நூலகம்
...ட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

நம் சொந்த வரலாறை நாமே எழுதுவதால்தான் பிறருக்கு பலவேளைகளில் தீர்க்கதரிசிகளாய் அமைகின்றோம்.

-- மதாம் ஸ்வெட்மீன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# தீர்வு தொலைவில்

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு வசதியாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்த ஆலோசனைகள் சிறிலங்கா அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டதாக பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார், இதனை சர்வோதயத் தலைவர் ஆரியரெட்னாவிடம் விடுதலைப் புலிகள் நடத்திய பேச்சுக்களின்போது தெரிவித்திருந்த ஆலோசனைகளே நிராகரிக்கப்பட்டவை எனக் கொள்ளலாம்.

இவ்விவகாரத்தில் முதலில் உள்ள கேள்வி விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டத்தை சிறிலங்கா ஜனாதிபதியிடமோ அன்றி சிறிலங்கா அரசாங்கத்திடமோ ஒப்படைத்திருந்தார்களா என்பதே ஆகும். ஆனால், கிடைக்கும் தகவல்கள் அதற்கு சாதகமாகவில்லை. யாழ். வந்த நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் தீர்வுத் திட்டம் எதையும் கொண்டு வரவில்லை என்பதையும் தாமும் வந்த தூதுக்குழுக்களிடம் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை எனவும், இவ்விவகாரம் வெளிவருவதற்கு முன்னரே விடுதலைப் புலிகள் பத்திரிகையாளரிடம் தெளிவாகத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு, தற்பொழுது ரணில் விக்கிரமசிங்கா நிராகரித்ததாகக் கூறும் யோசனைகளும் / சமாதானம் உருவாவதற்கான வழிவகைகளும் சர்வோதயத் தலைவர் ஆரியரெட்னாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது பரிமாறிய கருத்துக்களேஒழிய சமாதானத் தீர்விற்கென அரசிடம் கூறியவை அல்ல. அதாவது, ஆரியரெட்னாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில நடந்த பேச்சுவார்த்தை ஒலிப்பதிவு நாடா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் ஒப்படைக்கப்பதற்கானதோ அன்றி அரசாங்கத்தின் பரிசிலனைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கானதோ அல்ல. இதனை ஆரியரெட்னாவின் வானொலிப் பேட்டியில் இருந்தே அறிய முடிகின்றது.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் சமரசப் பேச்சுவார்த்தைக்காக அரசிற்கு ஒலிப்பதிவு நாடா அனுப்பியதாகவோ அன்றி தூதுவிட்டதாகவோ கருதிக்கொள்ள இடமில்லை, ஆனால், நல்லெண்ணக் குழுக்களிடம்

# சிறிலங்காவின் சட்டங்கள் மதவாச்சி வரையே அமுல்

-மகிந்த ராஜபக்ஷா

(கொழும்பு)

எமது சட்டங்கள் மதவாச்சிக்கு அப்பால் அமுல் செய்யப்படுவது இல்லை. இவ்வாறு பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ஷா தெரிவித்தார்.

நீதி அமைச்சு சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் கடந்த 17 வருடங்களாக இந்த அரசு வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க எதுவும் செய்யாதிருப்பதால் தான் இந்த நிலை ஏற்பட்டதாகவும், வடக்கு கிழக்கில் பிரபாகரனின் சட்டமே அமுல் செய்யப்படுவதாகவும் தெரிவித்தார். இனப்பிரச்சினையை பிச்சைக்காரனின் புண்போல சுகப்படுத்தாமல் வளர்க்கவே அரசு முற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

உயர்நீதி மன்றத்திலேயே அரசுக்கு சொந்தமான கோடிக்கணக்கான ரூபா முதல் மோசடி செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் வெளியாகியிருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

# மாதோவ தோட்டத்தில் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

மடுல்சீம மாதோவ தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 1500 தொழிலாளர்கள் கடந்த 8ஆம் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

பதினான்கு கோரிக்கைகளை முன்வைத்து நடைபெறும் இவ் வேலை நிறுத்தத்தில் வேலைப்பளு அதிகரிப்பு, வேலையின் அளவு கூட்டப்பட்டுள்ளமை, தொழிலாளர்களின் குடியிருப்புகள் சீர்திருத்தப் படாமைபோன்ற பல்வேறுகோரிக்கைகள் அடங்குவதாக தொழிற்சங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

# தமிழருக்கு வழங்கப்பட்ட உணவு தென்பகுதிக்கு

(கொழும்பு)

உலக உணவுத் திட்ட பிரிவால் வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் அகதிகளுக்கென வழங்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை சிறிலங்கா அரசு தென்பகுதி அகதிகளுக்கு வழங்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேற்படி பிரிவால் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு வழங்கவென அனுப்பிவைக்கப்பட்ட 19 கோடியே 20 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களும் கொழும்பு, குருநாகல், அநுராதபுரம், மாத்தளை, பொலநறுவ, புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள முகாம்களில் உள்ள 54 ஆயிரம் சிங்கள மக்களுக்கே வழங்க சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

# தென்னிலங்கையில் மீண்டும் ஜே. வி. பி. உயிர்த்தெழுகிறது

## கிளர்ச்சித்தடைப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்னிலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் ''நாசகாரசக்திகளின்'' நடவடிக்கைகள் மீண்டும் தலை தூக்கும், அறிகுறிகள் தென்படுவதாக பொலிஸ் தலைமையகத்தில் இயங்கும் 'கிளர்ச்சி தடுப்புப்பிரிவு' பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதுடன் கொள்ளைகளை நடத்தி வந்திருக்கிறார்கள் என்ற விபரம் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவர்கள் புனர்வாழ்வு முகாமிலிருந்தும் பொலிஸ் நிலையங்களிலிருந்தும் தப்பிச் சென்றவர்கள் இவர்களிடமிருந்து பணமும் ஆயுதங்களும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

# தமிழீழ பொருண்மிய வளம் மக்களை மண்தின்ன வைக்காது

இலங்கைத் தீவின் வளங்களில் கணிசமான பகுதி தமிழீழத்திலேயே தான் உள்ளது. நெல் உற்பத்தி. மீன் உற்பத்தி என்று ஒவ்வொன்றாக நோக்குகையில் இது புலனாகும்.

தற்போதைய சூழ்நிலையில் சிறிலங்கா அரசின் பொருண்மியத்தடை, எரிபொருள் தடை, மீன்பிடித்தடை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் தமிழீழத்தின் உச்ச உற்பத்தி அளவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பினும் தமிழீழ உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. அதற்கான சகல செயற்பாடுகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

| | | |
|---|---|---|
| 1990ஆம் ஆண்டு தமிழீழத்தின் மொத்த நெல் உற்பத்தி | 6,09,000 | மெ.தொ. |
| தென் தமிழீழத்தின் நெல் உற்பத்தி மாத்திரம் | 4,82,000 | ,, |
| தென் தமிழீழ மக்களுக்கு தேவையான நெல்லின் அளவு | 1,79,640 | ,, |
| எனவே தென்தமிழீழத்தின் மிகையான நெல் உற்பத்தி | 3,02,360 | ,, |
| அதேவேளை வட தமிழீழத்தின் நெல் உற்பத்தி | 1,27,000 | ,, |
| வட தமிழீழ மக்களுக்கு தேவையான நெல் | 1,94,610 | ,, |
| வட தமிழீழத்தின் மேலதிக நெல் தேவை | 67.610 | ,, |

எனவே தென் தமிழீழத்தின் மிகை உற்பத்தியைக் கொண்டு வட தமிழீழ மக்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தால் கூட மேலதிகமான நெல் உற்பத்தி

2,34,750 மெ. தொ.

இம் மிகை உற்பத்தியானது சிறிலங்காவுக்கே போய்ச் சேருகின்றது.

ஆனால் வட தமிழீழத்தில் நெற்செய்கைபண்ணக்கூடியமொத்த நிலப்பரப்பு 99,055ெகக்ரேயர் ஆகும் இந்தநிலப்பரப்பில் பயிர் செய்து உச்சவிளைவினைப் பெற தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. எனவே ஒரு கெக்ரேயருக்கான சராசரி விளைச்சல் 2.5 மெ. தொன் எனக்கொண்டால் கூட

| | | |
|---|---|---|
| இதிலிருந்து கிடைக்ககூடிய நெல்லின் அளவு | 2.47 637 | மெ.தொ. |
| ஆனால் வட தமிழீழ மக்களின் தேவை | 1,94,610 | மெ. தொ. |
| ஆகவே வட தமிழீழத்தின் மிகை உறபத்தி | 53,027 | ,, |

ஆக உயர்த்தலாம்.

| | | |
|---|---|---|
| இந்த நிலையில் தென்தமிழீத்தின் மிகை உற்பத்தியாகிய | 3,02,360 | ,, |
| வட தமிழீழத்தின் மிகை உறபத்தியாகிய | 53,027 | ,, |
| மொத்தமாக தமிழீழத்தின் மிகை உற்பதிதி | 3,55,387 | ,, |

ஆகும்.

இந்த மேலதிக உற்பத்தி ஸ்ரீலங்காவுக்கே போய்ச் சேர்ந்தது. கடந்த காலத்தில் இதன் மொத்தப் பெறுமதி கிட்டத்தட்ட 450 கோடி ரூபா ஆகும்.

இவ்வாறே தமிழீழத்தின் மீன் உற்பத்தியை நோக்கும்போது,

1983-ம் ஆண்டின் தமிழீழ மீன் உற்பத்தி 1, 04, 315 மெ.தொன்
1990-ம் ஆண்டின் தமிழீழ மீன் உற்பத்தி 51, 996 மெ.தொன்
1990 தமிழீழ மக்களிற்கான தேவை 40, 000 ,, ,,
ஆகவே மிகை மீன் உற்பத்தி 11, 996 ,, ,,

சுமுகமான நிலை காணப்படுமாயின் 1983-ம் ஆண்டைப்போல பல மடங்கு மீன் பிடிக்கப்பட்டு மிகை மீன் உற்பத்தி ஸ்ரீலங்காவிற்கே வழங்கக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு இருக்கையில் தமிழீழத்தில் எதுவித வளங்களும் இல்லை என்றும் கூறுவது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு ஒப்பாகும்.

விடுதலைப்புலிகள் ஈழம் கோருகின்றனர் என்றுமே அவர்களுக்கு ஈழம் கிடைக்காது. வடக்கு கிழக்குக்கு ஈழம் தரப்படும் எனக் கூறி தெற்கிலுள்ள தமிழர்களை அங்கு செல்லுமாறு நாம் கோரினால் என்ன நடக்கும். உண்பதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது மண்ணை மட்டும்தான் அவர்கள் தின்ன வேண்டும். அங்கு வருமானம் தரும் வளங்கள் என்ன? வடக்கு வளம் கொண்ட பூமி அல்ல. சகல பொருட்களும் தெற்கிலிருந்தே அனுப்ப வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு உணவுப் பொருட்கள் அங்கு அனுப்பப்படா விட்டால் அங்குள்ளவர்கள் பட்டினியால் வாட வேண்டி ஏற்படும்.

- ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

# மலேரியாவைத் தடுக்க உடனடி நடவடிக்கை தேவை -மகஜர்மூலம் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் மலேரியா நோயை நாம் உடனடியாக தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் ... மலேரியாவே எம்மை முழுமையாக வெற்றிகொள்ளும என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எமக்குத் தேவையான ... இப்பொருள்கள் பற்றாக் குறையினால் மலேரியா வேகமாகப் பரவும் பகுதியில் கூட தடுப்பு நடவடிக்கை மேற்

காரம் வெளிவருவதற்கு முன்னரே விடுதலைப் புலிகள் பத்திரிகையாளரிடம் தெளிவாகத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு, தற்பொழுது ரணில் விக்கிரமசிங்கா நிராகரித்ததாகக் கூறும் யோசனைகளும் / சமாதானம் உருவாவதற்கான வழிவகைகளும் சர்வோதயத் தலைவர் ஆரியரெட்னாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது பரிமாறிய கருத்துக்களேஒழிய சமாதானத் தீர்விற்கென அரசிடம் கூறியவை அல்ல. அதாவது, ஆரியரெட்னாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில நடந்த பேச்சுவார்த்தை ஒலிப்பதிவு நாடா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் ஒப்படைக்கப்பதற்கானதோ அன்றி அரசாங்கத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கானதோ அல்ல. இதனை ஆரியரெட்னாவின் வானொலிப் பேட்டியில இருந்தே அறிய முடிகின்றது.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் சமரசப் பேச்சுவார்த்தைக்காக அரசிற்கு ஒலிப்பதிவு நாடா அனுப்பியதாகவோ அன்றி தூதுவிட்டதாகவோ கருதிக்கொள்ள இடமில்லை, ஆனால், நல்லெண்ணக் குழுக்களிடம் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வொன்றைக் காண உருவாக வேண்டிய சுமுகமான சூழ்நிலை பற்றிப் பேசிவருவதொன்றும் ரகசியமானதல்ல, ஊரறிந்த விடயம் அது.

இவ்வாறு ஒலிப்பதிவு நாடா விவகாரம் ஒருபுறம் இருக்க, திரு. ஆரியரெட்னா விடுதலைப் புலிகளிடம் தான் பேசியதை தெரிவித்தபோது அதனைப் பரிசீலிப்பதாக ஜனாதிபதி தெரிவித்ததாகவும் அடுத்த கட்டமாக தலைவர் பிரபாகரனைச் சந்திக்க யாழ். வரவுள்ளதாகவும் ஆரியரெட்னா அறிவித்துள்ளார். இந்நிலையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கா வரிந்து கட்டிக் கொண்டு அவசரப்பட்டு ஏன் புலிகள் தெரிவித்த யோசனைகள் எனக் கூறப்படுபவற்றை நிராகரிக்க வேண்டும்?

திரு. ஆரியரெட்னா இது குறித்துப் பேசியது ஜனாதிபதியிடமே. அதனை நிராகரிக்க வேண்டியதோ அன்றி பரிசீலிப்பதாகவோ அறிவிக்க வேண்டியவரும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே. இருப்பினும் திரு. ஆரியரெட்னா அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி சிந்திப்பதில் இருந்தே டி. பி. விஜேதுங்கா அவரின் யோசனைக்கு ஆதரவு அளிக்காது விட்டாலும் நிராகரிக்கவில்லை என்றே கொள்ள முடியும். ஆனால், ஜனாதிபதி டி. பியின் மௌனத்தின் நோக்கம் எதுவாகவும் இருக்கலாம்.

இந்நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முந்தியடித்துக் கொண்டு நிராகரித்தமையானது தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ளதாக வெளிவந்து கொண்டிருக்கும் அதிகாரப் போட்டியின் வெளிப்பாடா? அதாவது, ஜனாதிபதியின் முயற்சிக்கு அணுகுமுறைக்கு பிரதமர் போடும் முட்டுக்கட்டையா? என்றகேள்வியையே எழுப்புகின்றது.

சிங்கள அரசியல்வாதிகள், கட்சிகள் அதிகாரப் போட்டியில் எப்பொழுதும் தமிழ் மக்களையே பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வந்துள்ளனர், மாறி மாறி அவர்கள் பேசிய இனவாதமே இலங்கையை இன்று இந்நிலைக்குக் கொண்டுவந்துள்ளது. ஆனாலும், எவரும் அதைக் கைவிட்டதாக இல்லை. மாறாக, மேலும் மேலும் அதிகரித்து வந்துள்ளது. முன்னர் கட்சிகளுக்கு இடையில் இருந்த போட்டியானது, இன்று கட்சிக்குள்ளும், தனிப்பட்ட ரீதியிலும் தமது நிலையைப் பலப்படுத்திக் கொள்ளவும், அதிகாரத்தைக் கைப்பற்றவும் பயன்படுத்தும் அளவிற்கு வளர்ந்துள்ளது. இந்நிலையில், இனங்களின் சமாதானம், பிரச்சினைக்குத் தீர்வு என்பவை நீண்ட தொலைவிலேயே உள்ளது.

அகதிகளுக்கு வழங்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேற்படி பிரிவால் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் ... இடங்களிலுள்ள முகாம்களில் உள்ள 54 ஆயிரம் சிங்கள மக்களுக்கே வழங்க சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

# தென்னிலங்கையில் மீண்டும் ஜே. வி. பி. உயிர்த்தெழுகிறது

## கிளர்ச்சித்தடைப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்னிலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் ''நாசகாரசக்திகளின்'' நடவடிக்கைகள் மீண்டும் தலை தூக்கும், அறிகுறிகள் தென்படுவதாக பொலிஸ் தலைமையகத்தில் இயங்கும் 'கிளர்ச்சி தடுப்புப்பிரிவு' பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதுடன் விழிப்புடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கிறது.

தென் பகுதிகளில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்கள் ஆயுத திருட்டுக்கள் மற்றும் கைது செய்யப்பட்டோரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இந்த நாசகார சக்திகளின் அச்சுறுத்தல் குறித்து கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஜே. வி. பியைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு பேர் கடந்த வாரம் பொலநறுவை, அனுராதபுரம் பகுதிகளில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இயக்கத்திற்காக கொள்ளைகளை நடத்தி வந்திருக்கிறார்கள் என்ற விபரம் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவர்கள் புனர்வாழ்வு முகாமிலிருந்தும் பொலிஸ் நிலையங்களிலிருந்தும் தப்பிச் சென்றவர்கள் இவர்களிடமிருந்து பணமும் ஆயுதங்களும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை தென் பகுதியில் பெலியத்தை, தங்காலை போன்ற இடங்களில் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எம்பிலிப்பிட்டிய, மகியங்கனை போன்ற பகுதிகளிலும் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களும் இந்த இயக்கங்களுடன் சேர்ந்து கொள்ளையில் ஈடுபட்ட பல சம்பவங்களும் பொலிஸ் விசாரணைகளில் அம்பலமாகியிருக்கிறது.

ஜே. வி. பியினர் நடவடிக்கைகள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் தலைமையகம் கண்டிப்பான அறிவுறுத்தலை விடுத்திருக்கிறது.

# பெற்றோர் சினிமா மோகம் பிள்ளைகளைச் சாகடித்தது

(சென்னை)

பெற்றோரின் சினிமா மோகம் பிள்ளைகளின் உயிருக்கே உலை வைத்த சம்பவமொன்று தமிழ்நாடு செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

பிள்ளைகள் இருவரையும் வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு தந்தையும், தாயும் சினிமா பார்க்கச் சென்றிருந்தனர். நள்ளிரவு வேளையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் வீடே எரிந்து சாம்பராகியது. இதனால் அவ்வீட்டினுள் வைத்துப் பூட்டப்பட்டிருந்த சிறுவர்களான ஆதி, (வயது 11), ஜெயராமன் (வயது 9) ஆகிய இருவரும் மரணமடைந்தனர். நளளிரவு நேரம் அக்கம பக்கத்தில் உள்ள வீடொன்றில் பிடித்த தீ காற்றினால் சிறுவர்கள் இருந்த வீட்டையும் எட்டியது. சூழ்ந்து பற்றியது.

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த சிறுவர்கள் திடுக்கிட்டு எழுந்தனர். வீடு தீப்பற்றியதை அறிந்தனர். வீரிட்டுக் கதறினர் ஆனால் வெளியே வரமுடியவில்லை.

சிறுவர்களின் கூக்குரல் வீட்டுக்கு வெளியிலும் பலமாகக் கேட்டது. பாபு என்ற இளைஞர் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தார். மிகுந்த சிரமத்துடன் சிறுவர்களை வெளியே கொண்டு வந்து சேர்த்தார்.

தீக்காயங்களுடன் மூவரும் பூனேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். ஆனால் சிறுவர்கள் இருவருமே பலமான தீக்காயங்களுக்கு உள்ளாகியிருந்ததால் உயிரிழந்தனர். சினிமா மோகத்தால் பெற்றோர் குழந்தைகளை இழந்தனர்.

பயிர் செய்து உச்சவிளைவினைப் பெற தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. எனவே ஒரு ஹெக்ரேயருக்கான சராசரி விளைச்சல் 2.5 மெ. தொன் எனக்கொண்டால் கூட

| | |
|---|---|
| இதிலிருந்து கிடைக்கக்கூடிய நெல்லின் அளவு | 2,47 637 மெ.தொ. |

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

அல்ல. சகல ... அனுப்ப வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு உணவுப் பொருட்கள் அங்கு அனுப்பப்படாவிட்டால் அங்குள்ளவர்கள் பட்டினியால் வாட வேண்டி ஏற்படும்.

- ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா

# மலேரியாவைத் தடுக்க உடனடி நடவடிக்கை தேவை -மகஜர்மூலம் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் மலேரியா நோயை நாம் உடனடியாக தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் அப்படி நாம் எடுக்காவிட்டால் மலேரியா சாவுதான் எம்மை வெற்றி கொள்ளும் என யாழ் மாநகர சுகாதார அத்தியட்சர் பிரிவினர் மலேரியா தடுப்புச் சங்கத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

நாம் மலேரியாவை அழிக்க தாமதமாகும்போது அதற்கான உபகரணம் வசதிவாய்ப்புக்களும் கிடைக்காவிட்டால் மலேரியாவே எம்மை முழுமையாக வெற்றிகொள்ளும என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எமக்குத் தேவையான உடனடியான மலேரியா தடுப்பு மருந்துகளையும் ஏனைய உபகரணங்களையும் அனுப்பி வைக்குமாறு அம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மலத்தீன் 100 பெட்டி, இரத்த பரிசோதனை செய்ய பயன்படுத்தப்படும் 100 ஊசி, 5000 கண்ணாடி கிளைட் ஆகியவற்றை அனுப்புமாறு வேண்டுகோள்விடுத்துள்ளார்

இப்பொருள்கள் பற்றாக் குறையினால் மலேரியா வேகமாகப் பரவும் பகுதியில் கூட தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படமுடியாமல் இருப்பதாக அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யாழ் மாநகர சபையில் காய்ச்சல் ஏற்பட்டவர்களின் 25 சதவீதத்தினர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டனர் என்றும் இதில் 16 வீதத்தினர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர் என அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நி)

# இந்த தலைமுறையின் காலத்தில் வெற்றியை பெற்றுவிட வேண்டும்

## - புதுவை இரத்தினதுரை

(தென்மராட்சி)

இந்தப் போராட்டத்தினை எமது தலைமுறையிலேயே முடித்துவிட வேண்டும் எமது அப்பன் விட்ட தவறை நாம் விடுவோமாயின் எமக்குப்பின்னால் வரும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சந்ததி எம்மைவிடக் கூடிய கஷ்டத்தினை அனுபவிக்க நேரிடும். இந்த வேலளயில் காலம் ஒரு கதவைத் தட்டி திறந்து கதாநாயகனாக தலைவர் ஒருவரைத் தந்துள்ளது. இவ் உறுதி மிக்க—வீரம் செறிந்த இத தலைவனின் காலத்திலேயே இந்தத் தலைமையின் கீழ் நின்று வெற்றி பெற வேண்டிய தேவை எமது மக்களுக்கு உண்டு. இப்போராட்டம் நீதி, நியாயமானது ஒரு போராளிக்கு இருக்கின்ற உணர்வு ஒவ்வொரு மக்களுக்கும் இருக்க வேண்டும். அப்போதுதான் எமது போராட்டம் விரைவாகச் சென்று வெகுவிரைவில் எமது சுதந்திரத்தை அடைய முடியும் என அண்மையில் பளை மகா வித்தியாலயத்தில் நினைவழியா நாட்கள் கவிதைநூல் அறிமுக விழாவில் கலந்துரையாற்றிய புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய புதுவை இரத்தினதுரை அவர்கள் இந்தமண்ணிலேநிற்கின்ற பனை, தென்னைமரங்கள், மாடுகள் எதிரியின்குண்டுவீச்சுக்கு காயப்படுகின்றன ஆனால் நாங்கள் பேசக்கூடியவர்கள் ஒருவருக்கும் தலை குனியாது நிற்கின்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாங்கள். எனவே தமிழன் தமிழனாக வாழவேண்டும். எமது உரிமையை கேட்பதற்கு எமக்கு உரிமை உண்டு சிங்களவர் கூட கூறியுள்ளார்கள். தமக்கு பிரபாபோல் ஒருவர் இல்லை என்று ஆனால் எமக்கு அவர் இருக்கும் காலத்திலே வெகுவிரைவில் ஒரு நல்லகாலம் கிட்டும் வெகுவிரைவில் தமிழீழம் மலரத்தான்போகிறது இது நிச்சயம் என்றார்.

# நிவாரண விநியோகத்தில் சீனியின் அளவு மிகக்குறைவு

இடம்பெயர்ந்தோருக்கான 1994 ஜனவரி மாத நான்கு வார இலவச நிவாரண உலர் உணவுப் பொருட்களாக அரிசி, சீனி, மைசூர் பருப்பு, புளி, சோயாமீற், தீப்பெட்டி ஆகிய பொருட்கள் வழங்கப்படும். இவற்றில் சீனி மிக சொற்ப அளவே வழங்கப்படவுள்ளது ஐந்தும் ஐந்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்குரிய சீனியின் அளவு 1 கிலோ 600 கிராம்தான்.

(22)

**அன்னிய உணவை மறப்போம்-நம் மண்ணிலே பயிரை வளர்ப்போம்**

எமது உளங்கனிந்த
பாராட்டுக்கள்

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் 16-02-1994 புதன்கிழமை பி. பகல் 3.00மணியளவில் இணுவிலில்தனது செயற்பாட்டை ஆரம்பிக்க இருக்கும்

## அறிவியல் கழகத்திற்கு


எமது ஸ்தாபனத்தின் உளங்கனிந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேலணை ப. நோ. கூ. சங்கம்
(இ - 8643)



## திருமணப் பொன் விழா

***16-2-1944 — 16-2-1994***



சில்லாலையைச் சேர்ந்த
சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை
(உடையார்)
மரியாம்பிள்ளை மரியம்மா தம்பதிகளின்

### திருமணப் பொன்விழா

இந்நன் நாளில் இறைவனுக்கு நன்றி கூறி
உங்களை வாழ்த்தும்

**பிள்ளைகள்:**

எட்வின் யோசவ் (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), டெனிசியஸ் (தபாலதிபர், சங்கானை), காலஞ்சென்ற வில்லியம் ஜெயராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), றஞ்சிதம் (லண்டன்),


# இனப்பிரச்சினை குறித்த ஜனாதிபதியின் போக்கு தொலைநோக்கு அற்றது

## விஜேதுங்கா மீது இந்துப் பத்திரிகை சாடல்

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று விஜேதுங்கா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவது இனநெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சவாலை வெறுமனே பயங்கரவாதம் என்று அவர் தரங்குறைப்பதும் தூரதிருஷ்டியான தந்திரோபாய நோக்கு இல்லாதிருப்பதையே எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு இந்துப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் இராணுவத் தீர்வு மார்க்கமானது கொழும்பில் அதிகாரத்தில் இருந்த அரசாங்கத்திற்கு அனர்த்தமானது என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும். கிளாலியிலும் பூநகரியிலும் கடந்த வருடம் இடம்பெற்ற சம்பவங்கள்தாக்குதல் தொடுப்பதில் புலிகளுக்கிருக்கும் வல்லமையும் ஆற்றலும் அசைக்கமுடியாதவையாக தொடர்ந்து இருப்பதையே உணர்த்துகின்றன. வடக்கு-கிழக்கிலே நடைபெறும் போரிலே சிறிலங்கா படைகள் வெற்றிபெறும் சாத்தியத்திற்கு எதிரானதாகவே பலச்சமநிலையும் இருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

# டென்மார்க் கடலில் மீட்கப்பட்ட தமிழர் குறித்து விசாரணை

(ஹெராப்பன்ஹெய்கன்)

கடந்தவாரம் டென்மார்க் கரையோரத்தில் படகிலிருந்து மீட்கப்பட்ட 36 இலங்கை அகதிகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுவீடனில் உள்ள சிறிலங்கா தூதுவர் சிறிலங்கா வெளியுறவு அமைச்சினால் பணிக்கப்பட்டுள்ளார்.

டென்மார்க்கிலும் சிறிலங்கா நலன்களை கவனித்து வரும் சுவீடனில் உள்ள சிறிலங்கா தூதுவரான நெவில் ஜெயவீர டென்மார்க் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மேற்படி அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக ஆராய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது,

## பேச்சுப் போட்டி

யாழ். கோட்டம் விவேகானந்த சுவாமி பேச்சுப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் ஆரம்பமாகும். பாடசாலை மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட முதலாமிடம் பெற்ற மாணவர்கள் இதில் கலந்து கொள்வர் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் புலேந்திரன் தெரிவித்துள்ளார்.

# களவாடப்பட்ட பொருள்கள் காவல்துறையினரால் மீட்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் ஒரு வீட்டில் இருந்து களவாடப்பட்ட 18ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுப் பொருள்களை வல்வெட்டித்துறை காவல்துறையினர் மீட்டதோடு இச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரையும் கைது செய்தனர்.

சற்குணதாஸ் உதயகுமாரி என்பவரது வீட்டில் இருந்து மார்க்கண்டு பழனிவேல், அப்புலிங்கம் சூரியகுமாரி என்ற இருவரும் திருடிய சேலைகள், மணிக்கூடு, சில்வர் பாத்திரங்கள் மற்றும் பொருள்களையும் காவல்துறையினர் மீட்டனர்.

மேற்குறித்த காவல்துறையினர் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரையும் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர். நீதியாளர் ஆளுக்கு தலா மூவாயிரம் ரூபா குற்றப்பணமும், இழப்பீடாக ஆளுக்கு தலா 1,500 ரூபா அபராதம் செலுத்துமாறு கட்டளையிட்டார். (யோ)

## உலங்குவானூர்திகள்

வருடம் முதற் தடவையாக கொள்வனவு செய்யப்பட்டமை தெரிந்ததே.

இந்த உலங்கு வானூர்திகளில் பெருந்தொகையான சரக்குகளையும், துருப்புக்களையும் ஏற்றிச் செல்ல முடியும். இவற்றில் விமானந்தாங்கி எதிர்ப்பு பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. அநேகமாக யுத்த முனைகளிலேயே இவ்வாறான உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்படுவதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதிய விமானங்கள் ரஷ்யாவில் இருந்து இலங்கைவரும் முன்னர் விமானப் படையின் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தன ஓய்வு பெறவுள்ளதும் இவரது இடத்திற்கு புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரண

## உலங்குவானூர்தி

பகுதிகளின் வான்பரப்பில் வட்டமிட்டவாறு மக்கள் குடியிருப்புக்களை நோட்டமிட்டுச்சென்றது.

## ஆயுதங்களை

சூழ் நிலையையே உருவாக்கும் என்றும், எனவே ஆயுதங்களை கைவிடாத பேச்சுவார்த்தை நல்ல சூழ்நிலையை உருவாக்கமாட்டாது என்றும் தெரிவித்தார்.

## புதிய

பகுதியில் பயணம் செய்யக்கூடிய கனரக ஆயுதங்கள் உள்ள கடற்படை படகுகளின் அவசியம் உணரப்பட்டது. இதேவேளை தற்போது அயா

## நாச்சிக்குடா

49), அஜந்தா (வயது 2) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதைவிட இப்பகுதியில் காணப்பட்ட பல பொது மக்களின் குடியிருப்புக்களும் சேதமடைந்துள்ளன. (க),(நி)

## வலி-வடக்கு

பகுதிகளில் தொடர்ச்சியான குண்டுவீச்சு தாக்குதல்களை

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 818

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-5846, 24-5734, 28-0732, 24-5877, 24-4560 27-1380, 26-1098, 24-3071, 24-3063, 27-4070 27-2016, 42-3927, 41-7297, 41-8557.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-3735, 28 9492, 42-0999, 27-0849, 26-1862 26-3605, 24-6645, 24-4726, 28-8589, 28-4255 26-6678, 24-8714, 24-8079, 26-0536, 27-9825 27-2143, 24-9744, 42-0969, 26-1791, 24-5416 28-0854, 26-7217, 41-9659, 27-1375, 42-3329 40-2677, 28-1686,


நல்லூர் சங்கிலியன் மன்ற

## புதிய நிர்வாகசபை தெரிவு

13-02-1994ஆம் திகதி நல்லூர் வட்டவைப் பொறுப்பாளர் திரு. சதீஸ் (வேந்தன்) முன்னிலையில் மேற்படி மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைக்கு உறுப்பினர்களாக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

**போசகர்கள்**

திரு. சி. கனகரத்தினம் (ஜே. பி. யு. எம்.)
திரு. வே. பொ. பாலசிங்கம் (யாழ் மாநகரசபை ஆணையாளர்)
திரு. இராஜஇராஜேஸ்வரன் தங்கராசா (சட்டத்தரணி)
திரு. ச. பொ இராசலிங்கம் (பரஸ்கோ)
தலைவர்: திரு தி. ஸ்ரீஸ்கந்தராசா
உப-தலைவர்கள்: திரு. ப. செல்வராசா
திரு, ப. நடராசா
செயலாளர்: திரு. இ. ஜெயராஜா
உப-செயலாளர்: திரு. சி. அமிர்தலிங்கம்
பொருளாளர்: திரு. இ. சற்குணேஸ்வரன்

**நிர்வாகசபை உறுப்பினர்கள்:**

திரு. அ. மகேஸ்வரன் — திரு. ம. தவராசா
திரு. தி. செல்வராசா — திரு. கா. தவரத்தினம்
திரு. நா. சுகுமார் — திரு. த. ஆதித்தன்
திரு. பொ. பரமானந்தம் — திரு. க. யோகநாதன்
திரு. ச. பிறேமதாசன் — திரு. செ. கஜேந்திரன்
சு. நாகபூஷணி — சா. வசந்தினி
திரு. பி. ரஜீந்திரன்
திரு. இ. சந்திரகுமார் — திரு. இ. சிவனேசன்

பத்திராதிபர்: பொ. இராஜதுரை
கணக்காய்வாளர்: தி. இராஜகுலேந்திரன்
செயலாளர்: இ. ஜெயராஜா

(7538)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராசா

(பாண்டியன் பலசரக்கு மாளிகை ஊழியர்)

சில்லாலையைச் சேர்ந்த
சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை
(உடையார்)
மரியம்பிள்ளை மரியம்மா தம்பதிகளின்

## திருமணப் பொன்விழா

இந்நன் நாளில் இறைவனுக்கு நன்றி கூறி
உங்களை வாழ்த்தும்

**பிள்ளைகள்:**

எட்வின் யோசவ் (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), டெனிசியஸ் (தபாலதிபர், சங்கானை), காலஞ்சென்ற வில்லியம் ஜெயராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), றஞ்சிதம் (லண்டன்), புஸ்பம் (லண்டன்), புனிதம் (லண்டன்), அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை (பங்குத்தந்தை, அரியாலை), இன்பம் (லண்டன்)

**மருமக்கள்:**

மலர், ஜெயமணி (ஆசிரியர், பெரியவிளான்,) பற்றிமா, யேசுதாசன் (லண்டன்), ஜெயராஜா (லண்டன்,) யோகதேவா (லண்டன்)

**பேரப்பிள்ளைகள்:**

திவ்வியராஜ், கொலின், மொறின், அரவிந், ஆர்த்தி, ஜெயசங்கீதா, றோகான் (லண்டன்), டயான் (லண்டன்), யேசன் (லண்டன்) யோஆன் (லண்டன்)

(சி-8641)

## மங்கள மண வாழ்த்து

மணமகன்

**திரு. பா. கணேசலிங்கம்**
ஆசிரியர், நித்தியகுரு
மீசாலை, திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்

மணமகள்

**திருநிறைச் செல்வி சிவமதி**

கடந்த 11-2-94 அன்று இல்வாழ்வில் இணைந்த தம்பதிகள் இருவரும் சிறப்புற்று இனிதுவாழ வெள்ளை மாவடி விநாயகர் அருள்வேண்டி - ஆசீர்வதிக்கின்றோம்.

வெள்ளைமாவடி விநாயகப் பெருமான் ஆலயத்தில்
உள்ளமுரு இப்பூசைப்பணி கொள்ளும் - துள்ளுபுகழ்
நல்லாசான் கணேச லிங்கம் சிவ மதியுடனே
இல்லத்தில் இனிமையுற வாழ்க.

வாழ்த்துவோர்:
மீசாலை, திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார்
ஆலய அடியார்கள்

(7536)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### உலங்குவானூர்தி

பகுதிகளின் வான்பரப்பில் வட்டமிட்டவாறு மக்கள் குடியிருப்புக்களை நோட்டமிட்டுச்சென்றது.

### ஆயுதங்களை

சூழ் நிலையையே உருவாக்கும் என்றும், எனவே ஆயுதங்களை கைவிடாத பேச்சுவார்த்தை நல்லசூழ்நிலையை உருவாக்கமாட்டாது என்றும் தெரிவித்தார்.

### புதிய

பகுதியில் பயணம்செய்யக் கூடிய கனரக ஆயுதங்கள் உள்ள கடற்படைபடகுகளின் அவசியம் உணரப்பட்டது. இதேவேளை தற்போது தயாரிக்கப்பட்டுள்ள 'பி 483' விரைவு தாக்குதல் படகு நிறைவேற்றுகின்றது என ஐலண்ட் பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி கடல் கொந்தளிப்பாக இருந்தவேளை இப் படகை சோதனை ஓட்டத்திற்காக விட்டபோது அது 40 கடல் மைல் வேகத்தில் ஓடியது. இது கடற்படையிடம் உள்ள மிக வேகம்கொண்ட படகு எனக் கூறலாம் என கொழும்பு டொக்யார்ட் நிறுவனத் தலைவர் திரோன் பீரிஸ் கூறினார். இத்தகைய படகுகளை தயாரித்து எதிர்காலத்தில் பிறநாடுகளுக்கும் நாம் ஏற்றுமதிசெய்யமுடியும் எனவும் அவர் கூறினார்.

இதேசமயம் இரண்டாவது விரைவு தாக்குதல் கடற்படை படகு இம்மாத இறுதியில் பிரான்சில் இருந்து வந்து சேரவுள்ளது.

வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் படகுகள் போலல்லாது இது கொழும்பிலேயே தயாரிக்கப்படுவதால் கடற்படையின் வழிகாட்டல் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப அதில் மாற்றங்களை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 1992 இல் கொழும்பு டொகயார்ட் நிறுவனத்தால் கடற்படைக்கு பாரிய தரை இறக்கும் கப்பலான ரணகஜா உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### மாணவரமைப்பின்

ஆகியோர் கலந்துகொள்வர். அறிவியற்கழகத்தை தமிழீழ துணை அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் திறந்து வைப்பார். இக் கழக மாணவ அறிவியற்துறை சார்ந்த பல செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (09),(11)

டமை தெரிந்ததே.

இந்த உலங்கு வானூர்திகளில் பெருந்தொகையான சரக்குகளையும், துருப்புக்களையும் ஏற்றிச் செல்ல முடியும். இவற்றில் விமானந்தாங்கி எதிர்ப்பு பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. அநேகமாக யுத்த முனைகளிலேயே இவ்வாறான உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்படுவதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதிய விமானங்கள் ரஷ்யாவில் இருந்து இலங்கைவரும் முன்னர் விமானப் படையின் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தன ஓய்வு பெறவுள்ளதும் இவரது இடத்திற்கு புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளதும் இவர் நாளை தனதுபதவியை ஏற்கவுள்ளார் என்பபதும் குறிப்பிடத்தக்கது இது இவ்வாறிருக்க அரசாங்கம்ஒருபுறம் பேச்சுவார்த்தைக்கான சமதான கதவுகள் திறந்து இருப்பதாக அறிவித்துக் கொண்டு மறுபுறத்தில் ஆயுதப் படைகளை நவீனமயப் படுத்துவதில் தீவிரம் காட்டி வருவதை பலரும் சுட்டிக் காட்டிக் காட்டியுள்ளனர்

### அரசின்

நின்று விடக்கூடியதல்ல.

தெளிவற்ற இராணுவ அரசியல் சிந்தனைகளால் வடக்கில் இராணுவ முகாம்கள் அடுத்தடுத்து வீழ்கின்றன. பிரதேசங்கள் இழக்கப்படுகின்றன. எதிரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

விடுதலைப் புலிகள் தொடர்பாக அரசிடம் தெளிவான கொள்கை ஏதும் இல்லாதிருப்பதால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாம் போரிடுவதில் இன்னல்களை தொடர்ந்து எதிர்நோக்குவதாக இராணுவ உயர்பீடம் கூறுகின்றது. நாட்டில் பல கோரிக்கைகள் எழுந்தும் கூட கடந்த சில மாதங்களாக புலிகளைபலவீனமாக்கும் பொருட்டு இராணுவம் பாரிய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாது இருக்கின்றது. இஸ்ரேலையோ இந்தியாவையோ எடுத்துக் கொண்டால் அவர்கள் நாட்டில் பூநகரி போன்ற ஒரு முகாம் அழிக்கப்பட்டிருந்தால் அந்நாட்டு இராணுவம் எதிரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருந்திருக்குமா?

ஜனாதிபதி விஜேதுங்கா அண்மைக்காலமாக இனப்பிரச்சினை இங்கு இல்லை பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது என கூறிவருகிறார். இது சமாதான நடவடிக்கையில் இருந்து விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தும் அத்துடன் அவர்களுக்கு தமிழ் மக்களின் ஆதரவையும் பெருக்கச் செய்யும் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்பதாலும் தமிழ் மக்களின் குறிப்பிடத்தக்க அளவு ஆதரவு அவர்களுக்கு இருப்பதாலும் சமாதானத் தீர்வு அவசியம் என்பது தெளிவாகிறது. வெளிநாட்டு இராணுவ உதவியை பெற்றால் கூட விடுதலைப் புலிகளின் பலத்தை அழிக்க 10 முதல் 20 வருடங்கள் பிடிக்கும்.

விடுதலைப் புலிகளை அழிக்கும் வகையில் இராணுவம் நடவடிக்கை மேல் நடவடிக்கை எடுக்கக் கூடிய பலத்தை கொண்டிருந்தால் ஜனாதிபதி விஜேதுங்காவின் அறிக்கைகள் பெறுமதிவாய்ந்தவைகளாக இருக்கும். ஆனால் இதற்கான தகைமை இராணுவத்திடம் காண்பதரிதாகவுள்ளது- இராணுவ அரசியல் ரீதியான அணுகு முறையே கொடூரமான ஒரு கெரில்லாப் போருக்கு எதிராக நாடு வெற்றிகரமாக போரிடுவதற்கு உதவும் என சண்டே ஐலண்டில் ராவணா எழுதிய செய்திக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர். நீதியாளர் ஆளுக்கு தலா மூவாயிரம் ரூபா குற்றப்பணமும், இழப்பீடாக ஆளுக்கு தலா 1,500 ரூபா அபராதம் செலுத்துமாறு கட்டளையிட்டார். (யோ)

### நாச்சிக்குடா

49), அஜந்தா (வயது 2) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதைவிட இப்பகுதியில் காணப்பட்ட பல பொது மக்களின் குடியிருப்புக்களும் சேதமடைந்துள்ளன. (க),(நி)

### வலி-வடக்கு

பகுதிகளில் தொடர்ச்சியான குண்டுவீச்சு தாக்குதல்களை நடாத்தியது. சுமார் முப்பது நிமிடங்கள் வரை நடாத்தப்பட்ட இத்தாக்குதலின்போது ஐந்திற்கு மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன.

இதேவேளை உலங்குவானூர்தி ஒன்று அப்பகுதியில் வட்டமிட்டு நோட்டமிட்டவண்ணமிருந்ததை காணமுடிந்தது பலாலி முகாமிலிருந்தும் எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| திரு. பொ. பரமானந்தம் | திரு. க. யோகநாதன் |
| திரு. ச. பிறேமதாசன் | திரு. செ. கஜேந்திரன் |
| சு. நாகபூஷணி | சா. வசந்தினி |
| திரு. பி. ரஜீந்திரன் | |
| திரு. இ. சந்திரகுமார் | திரு. இ. சிவனேசன் |

பத்திராதிபர்: கணக்காய்வாளர்: செயலாளர்:
பொ. இராஜதுரை தி. இராஜகுலேந்திரன் இ. ஜெயராஜா

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராசா
(பாண்டியன்பலசரக்கு மாளிகை ஊழியர்)

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா சிவபதமடைந்து விட்டார். இவர்காலஞ்சென்ற கந்தையா நாகேஸ்வரியின் அன்பு மகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரி (கொழும்பு), தங்கராசா (நாவலர் மகாவித்தியாலய ஆசிரியர்), கிருஸ்ணராசா (வண்ணார்பண்ணை) ஆகியோரின் சகோதரரும், நாராயணன் (கொழும்பு), சுலோசனா (நாச்சிமார் கோவிலடி) ஆகியோரின் மைத்துனரும், அருணகுமார், மோகனகுமார் ஆகியோரின் மாமனாரும் கிசோர், மிதுலா,லதன் ஆகியோரின் பெரியதகப்பனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 10, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி வண்ணார்பண்ணை இல்லத்தில் நடைபெற்று (16-02-94) இன்று புதன்கிழமை பி. ப. 1[illegible]-00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
யாழ்ப்பாணம்: (7540) பாண்டியன் பலசரக்கு மாளிகை

### கந்தர் செல்லத்துரை
(தரகர்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த கந்தர் செல்லத்துரை (தரகர்) 15-02-94 இல் காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக்கணவரும், மகாதேவி, முருகையா, கமலாஜினி (பிரான்ஸ்), விமலாதேவி, கணேசலிங்கம்(நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத்தந்தையும், இரத்தினம், நாகராஜா, தர்மலிங்கம், இராசேஸ்வரி, கலாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும், குஞ்சு, ரவி, வதனா, சந்திரன், ரஜனி, பவா, சாந்தி, செந்தில், பபியன், முகுந்தன், முகுந்தினி, ராதிகா, தர்சிகா, துவாரகா, சஜந்தினி, தர்ஷன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (16.02.94)புதன்கிழமை காலை 11.00 மணியளவில் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இணுவில் மேற்கு விமலாதேவி (மகள்)
(7537)